பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 17 திங்கட்கிழமை (30-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 124

# யாழ்ப்பாண கல்வி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்?

## வடமராட்சிக்குப் புதிதாக ஒன்று

திருகோணமலை, மார்ச் 30

இப்போதுள்ள யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான திட்டம் ஒன்றை வடக்கு — கிழக்கு மாகாண சபை வகுத்துள்ளது. இதற்கான அங்கீகாரத்தை கொழும்பு கல்வி அமைச்சிடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் இப்போது நடைபெற்று வருவதாகவும் மிகவும் நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து யாழ். கல்வி மாவட்டம், வடமராட்சி கல்வி மாவட்டம் என்ற இரண்டை உருவாக்குவதே இந்தத் திட்டமாகும். இரண்டுக்கும் தனித்தனிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

யாழ். கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு முன்னர் எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து இங்குள்ள கொத்தணிகள் கலைக்கப்படவுள்ளன.

அவற்றுக்குப் பதிலாக புதிய கல்வி வலயங்கள் உருவாக்கப்படும். அதன் மூலம் பாடசாலைகளின் நிர்வாகம் மேலும் பரவலாக்கப்படும்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் உள்ள பதின்நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தனித்தனியாக 14 கோட்டக் கல்வி அலுவலகங்கள் அமைக்கப்படும் எனவும் மாகாணசபை வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது. (அ)

## போதைப் பொருள்களுக்கு 2லட்சம் பேர் அடிமை

யாழ்ப்பாணம், மார்ச் 39

இலங்கையில் தற்போது 2 லட்சத்துக்கு மேற்பட்டோர் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி உள்ளனர். இந்தத் திடுக்கிடும் தகவலை போதைப் பொருள் பாவனை தடுப்புப் பணியகம் தெரிவித்திருக்கிறது. [உ]

## தொண்டர் ஆசிரியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு

### ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களின் மறியல் போராட்டத்தை மத்திய அரசோ அல்லது மாவட்டத் திணைக்களமோ அலட்சியம் செய்தால்—

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் அவர்களின் போராட்டங்களில் முழுமையாகப் பங்குபற்றும்— என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இ. த. ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் பாடசாலை வகுப்புக்களை எவ்விதத்திலும் பாதிக்காது; திணைக்கள செயற்பாட்டை மட்டும் தடை செய்துள்ளது. இந்தப் போராட்டத்தின் மூலம் ஸ்ரீலங்கா அரசு தமிழர் மீது காட்டும் பாரபட்ச நடவடிக்கை சர்வதேச அரங்கிற்கு வெளிக்கொணரப்பட்டுள்ளது. தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் கல்வியைச் சீரழித்துவிட்டது என எவரும் கூறமுடியாது.— என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். [அ]

# வவுனியா நேரியகுளத்தில் 3 காவலரண்கள் தகர்ப்பு

### ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், மார்ச் 30

வவுனியா நேரியகுளம் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றின் போது அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் மூன்று காவலரண்கள் தகர்க்கப்பட்டன. இச் சம்பவத்தில் படையினருக்குப் பலத்த இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏ. கே. எல். எம். ஜி. மகஸீன்கள் — நான்கு, ரீ 56 மகஸீன்கள்—இரண்டு, ஜே.ஆர். ரக கிரனைட்டுகள்—நான்கு, ஐ.எம். ரவைகள் [லிங்குடன்] — 355, ஐ. எம். ரவைகள் — 575 ஆகியவை உட்பட பல இராணுவத் தளபாடங்களையும் இத்தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றினர். [உ-5-165]

## படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பலாலி இராணுவ முகாமில் இருந்து கட்டுவன் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை வளலாயில் நிலைகொண்டுள்ள இராணுவம் இடைக்காடு, பத்தைமேனிப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

பலாலி முகாமிலிருந்து நேற்று இரவு 7.30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [உ-15]

## மட்டக்களப்பு பகுதியில் 7 தமிழ் இளைஞர்கள் கைது

கடந்த புதனன்று மட்டக்களப்பு பகுதியில் 7 தமிழ் இளைஞர்கள் சமூக விரோதக் குழு ஒன்றினால் பிடித்துச் செல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

னண்டூர் 13 ஆம், 14 ஆம் கட்டை, பாலையடி வெட்டை ஆகிய இடங்களில் உள்ள படையினருடன் சேர்ந்து தேடுதல் நடத்த வந்த குழு ஒன்றைச் சேர்ந்தவர்களே இவர்களைக் கைது செய்துள்ளனர்.

நாராயணபிள்ளை கிருபாகரன், பாலப்போடி குருகுலசிங்கம், பாலப்போடி விஜயகுமார், மாசிலாமணி நடராசா, ஜெயசுந்தரம் கோணமூர்த்தி, காளிக்குட்டி இராசையா, குருசாமி மகேந்திரன் ஆகிய ஏழு பேருமே பிடித்துச் செல்லப்பட்டவர்களாவர், [உ-5]

## முத்திரைச்சந்தியில் இரு ம. எண்ணெய் கடைகள் தீயினால் எரிந்து நாசம்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் உள்ள மண் எண்ணெய் விற்பனை செய்யும் கடைப் பகுதியில் நேற்று மாலை திடீரெனப் பற்றிய தீயினால் இரு மண்எண்ணெய் கடைகள் எரிந்து நாசமாகின.

''பெற்றோமக்ஸ்'' ஒன்றை இயக்க முனைந்த சமயம் அதிலிருந்து எழுந்த தீயினால் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.

தீயை அங்கு நின்றவர்களால் அணைக்க முடியாமற் போகவே யாழ். மாநகர தீயணைக்கும் சேவைப் பிரிவின் உதவி நாடப்பட்டது. அவர்கள் உடன் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

தக்க சமயத்தில் தீ அணைக்கப்பட்டதால் அங்கிருந்த ஏனைய பல கடைகள் அழிவில் இருந்து தப்பின. [உ-5]

## முச்சந்தி முரளி



உடும்பை தப்ப விட்டுப் போட்டு பிடிக்க முயற்சிக்கிற மாதிரி பாசாங்கு பண்ணுகிறம் போலை......

# டி. ஐ. ஜி. உடுகம்பொல தப்பிச் சென்றார்?

பொலீஸாரினால் தேடப்பட்டு வரும் முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல நாட்டைவிட்டு வெளியேறி விட்டார் என்று ''ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

தெற்கில் பயங்கர சூழ்நிலை நிலவிய சமயத்திலேயே உடுகம்பொல தனது நடவடிக்கைகளுக்காக அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டிருந்தார் என்று ''லங்காதீப'' பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

எனினும் உடுகம்பொல அமெரிக்கா செல்வதற்கு 'விஸா' வழங்கப்படவில்லை என்றும் —

தற்போது அமெரிக்காவில் உள்ள அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் 'விஸா' அனுமதி நீடிக்கப்படவில்லை என்றும் மற்றொரு கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. [உ-10]

## இந்தியா - புலிகள் உறவு சீர் செய்யப்பட முடியும்!

### பாலசிங்கம் கூறியதாகத் தகவல்

லண்டன், மார்ச் 30

''விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவுடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த முடியும்.''

— இவ்வாறு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதாக பி. பி. ஸி. அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடையே பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார் என்று கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. அறிவித்தது.

புலிகள் விடயத்தில் இந்தியாவின் கொள்கை உணர்ச்சி வழிப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அது அறிவு பூர்வமானதாக அமையும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.—

புலிகளுக்கு எதிரான இந்தியாவின் இத்தகைய போக்கு நீண்ட காலத்துக்கு நீடித்திருக்க மாட்டாது. —இவ்வாறு கலாநிதி பாலசிங்கம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஐந்து இலங்கைத் தமிழர் சென்னையில் கைதாகினர்

சென்னை, மார்ச் 30

தகுந்த பயண ஆவணங்கள் வைத்திராத ஐந்து இலங்கைத் தமிழர்கள் கடந்த சனிக்கிழமை இரவு சென்னையில் கைது செய்யப்பட்டனர்.

சென்னை கே. கே. நகர் வட்டாரத்தில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும்—

எஞ்சிய மூவர் சைதாப்பேட்டைப் பகுதியில் கைதாகினர் என்றும் பொலீஸார் கூறினார்கள்.

விடுதலைப் புலிகளுடன் அவர்களுக்குத் தொடர்பு உண்டா என்பது குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். [உ-எ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று மகாபொல பரிசளிப்பு
## பிரேமா - லலித் ஒரே மேடையில்

கொழும்பு, மார்ச் 30

மகாபொல பல்கலைக்கழகப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சி இன்று திங்கள் மாத்தளை பெர்னாட் அலுவிஹார அரங்கில் ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் நடைபெற உள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாண மாணவர்கள் உட்பட சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உள்ளனர்.

மகாபொல நம்பிக்கை நிதிய ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர் என்ற முறையில் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். திரு. அத்துலத் முதலி அழைப்பை ஏற்று நிகழ்ச்சியில் உரை நிகழ்த்த ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆளும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் திரு. அத்துலத் முதலியும், திரு. பிரேமதாஸாவும் ஒரே மேடையில் பேசவிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# துலா போடுவதற்காக பனைகளைத் தறிக்க அனுமதி

தெல்லிப்பழை, மார்ச் 30

விவசாய முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக முந்நூறுக்கு அதிகமான பனைகளை தறித்து துலாக்கள் போட வலி — வடக்குப் பகுதி விவசாயிகளுக்கு சுன்னாகப் பகுதி தமிழீழ ஆய்வு நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

கீரிமலைப் பகுதியில் மட்டும் சுமார் நூற்றி நாற்பது துலாக்களின் பாவனைக்கு பனை தறிக்க அனுமதி வழங்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து இப் பகுதியில் பாவிக்க முடியாத நிலையில் இருந்த கிணறுகள் துலாவுடன் காட்சி அளிப்பதை காண முடிகிறது. [த-68]

# கனடாவில் கடவுச்சீட்டு மோசடி: வழக்கு விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 30

கனடாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கடவுச்சீட்டு மோசடி சம்பந்தமாக சாந்தகுமார் குமரசாமி, லோகநாதன் சபாநாயகம் ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு ஒன்ராறியோ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

கனேடிய பொலீஸ் அதிகாரி ஒருவர் விசாரணையின் ஒரு கட்டத்தில் சாட்சியமளித்தார்.

போலிக் கடவுச் சீட்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை அறவிடப்பட்டது என்று அந்த அதிகாரி தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அகதிகளாகக் கனடா நுழைந்த சந்தேக நபர்கள் எவ்வாறு கனேடிய பாஸ்போர்ட்கள் மூலம் இலங்கையரை அங்கு வரவழைக்க மோசடி செய்தார்கள் என்ற விவரமும் விசாரணையின் போது வெளியானது என்றும் தெரிவிக்கப்பட்டது

### அன்னை பூபதி நினைவாக
# உண்ணாவிரதமும் சிரமதானப் பணியும்

கொழும்புத்துறை, மார்ச் 30

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை முதல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்வது என்றும்— 17 ஆம் திகதி வரை சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதென்றும் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து கிராம மட்டத்திலான கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இறுதியாக எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்தவும் சம்மேளனம் முடிவு செய்துள்ளது. [த-30]

# தாமதித்து வரும் ஊழியர் பற்றிய சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

காலையில் தாமதமாக அலுவலகத்துக்கு வரும் அரச ஊழியர்கள் அந்த தாமதத்தை ஈடுசெய்ய மாலையில் தாமதித்தே வீடு செல்ல வேண்டும். அத்துடன் பெண் உத்தியோகத்தர் ஒருவர் கர்ப்பம் தரித்திருந்தால் அவர் கர்ப்பம் தரித்து 5 மாத முடிவில் அரை மணித்தியாலம் தாமதித்து வேலைக்கு வர அனுமதிக்கப்படுவார். அதே போன்று மாலையில் அரை மணித்தியாலம் முன்பாகவே வீடு செல்லவும் அனுமதிக்கப்படுவார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது [இ-100]


## அறிவித்தல்

இன்று முதல் எமது ஸ்தாபனத்தில் சகல வகையான குளிர் சுவை உண்டிகளையும் மற்றும் குளிர் பானங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என எமது வாடிக்கையாளர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

★ ராஜா கிறீம் ஹவுஸ் ★

இல. 36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[20291]


# செஞ். சங்க பிரதான பதவிகளுக்கு மீண்டும் முந்தியவர்களே தெரிவு
## ஏனைய வேட்பாளர் கடைசி நேரத்தில் வாபஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 30

செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் பிரதான நிர்வாகப் பதவிகளுக்கான தெரிவு எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக எவ்வித சலசலப்பும் இன்றி அமைதியாக நடந்தேறியது.

தலைவர், உபதலைவர், செயலாளர். பொருளாளர் பதவிகளுக்குப் போட்டியிட்ட வேட்பாளர்கள் கடைசிநேரத்தில் தத்தமது மனுக்களை வாபஸ் செய்ததாக அறிவிக்கப்பட்டது. (அவர்கள் கடிதங்கள் கூட்டத்தில் வாசித்துக் காட்டப்பட்டன.)

அதனைத் தொடர்ந்து இதுவரை அப்பதவிகளை வகித்தவர்களே மீண்டும் அவற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பதவிக்கு போட்டியிட மனுத் தாக்கல் செய்திருந்த நால்வரில் மூவர் வாபஸ் பெற்றுக் கொண்டதால் டாக்டர் சுரேந்திரன் நச்சினார்க்கினியன் ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளர் பதவிக்கு மனுத் தாக்கல் செய்திருந்த ஐவரில் நால்வர் தமது விண்ணப்பங்களை வாபஸ் பெற்றதால் அப்பதவிக்கு திரு. சபாரத்தினம் சிவானந்தராசா போட்டியின்றி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவர் பதவிக்கு மொத்தம் மூன்று பேர் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களில் இருவர் வாபஸ் பெற்றதால் திரு யோசப் ஜோர்ஜ் இராஜேந்திரம் போட்டியின்றி மீண்டும் தெரிவானார்.

பொருளாளர் பதவிக்கும் மனுச் செய்து இருவர் வாபஸ் பெற்றதால் திரு குமாரசாமி சற்குணலிங்கம் அப்பதவிக்கு மீண்டும் தெரிவானார்.

ஐவர் கொண்ட தேர்தல் குழுவால் நடத்தப்பட்ட இத்தெரிவுகளின் போது பருத்தித்துறைக் கிளையில் இருந்து வந்த பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

மேற்கண்ட பிரதான பதவிகளுக்கான தேர்தல்கள் முடிந்த பின்னர் ஐந்து நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக வாக்கெடுப்பு நடைபெற்றது. நிர்வாக உறுப்பினர் பதவிகளுக்கு முதலில் மொத்தம் 23 பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த போதிலும் ஐவர் கடைசி நேரத்தில் வாபஸ் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்று பிற்பகல் 2.30மணிக்கு ஆரம்பமாகி சுமார் 4 மணி வரை நீடித்தது.

இதற்கு முன்னர் சங்கத் தலைவர் டாக்டர் சு. நச்சினார்க்கினியன் தலைமையில் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9 30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது.

பொதுக் கூட்டத்தில் கடந்த வருட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. இக் கூட்டத்தில் நல்லூர், உடுவில் உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. (அ-15)

## நோயாளருடன் கப்பல் வியாழன் புறப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களை ஏற்றிக் கொண்டு குமுதா கப்பல் எதிர்வரும் 2ஆம் திகதி [வியாழக்கிழமை] புறப்படவுள்ளது.

அதனால் கொழும்பு செல்ல தெரிவு செய்யப்பட்ட நோயாளர் அனைவரும் அன்றைய தினம் காலை 7 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு சமுகம் தருமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [உ-15]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 30

''வடபிரதேசத்தில் அண்மைக்கால இறப்புகளும், அவற்றிற்கான காரணிகளும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு கா. குகபாலன் கருத்துரை வழங்குவார்.

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் விழா இன்று காலை 8-45 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. வேலாயுதம் கலந்து கொள்வார்.

★ ★ ★

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வலிகாமம் பிரிவினர் நடத்தும் கலை நிகழ்ச்சி இன்று மாலை 7-30 மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெறும்.

## கைதடியில் நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, மார்ச் 30

கைதடிப் பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் நடவடிக்கை இன்று திங்கட்கிழமை காலை 9 — 12 மணி வரை கைதடி உப அலுவலக கட்டடத்திலும், பகல் 1 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கைதடி வடக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [த-117]

## 4 பெண்கள் விசர் நாயினால் கடியுண்டனர்

தென்மராட்சி, மார்ச் 30

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நான்கு பெண்கள் விசர்நாயொன்றினால் கடியுண்ட சம்பவம் கடந்த வாரம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கே. தர்சனி [வயது 24], கே. சுதர்சனி [வயது 20], கே. சாந்தநாயகி [வயது 12], எஸ் பத்மாவதி [வயது 32] ஆகியோரே வீதியால் சென்ற [illegible]. [த-117]

# ஔவையார் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 30

கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை ஔவையார் விழா கொண்டாடப்பட உள்ளது.

அன்று மாலை 5 மணிக்கு விசேட பூஜையுடன் ஔவையார் விழா நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

தொழிலதிபர் திரு. க கனகராசா தலைமையில் மரம் நாட்டு நிகழ்ச்சியும் தொடர்ந்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிறப்புரையும் இடம்பெறும்.

அதன் பின்னர் பண்டிதர் பொன்னம்பலவாணர், திரு. க. சிவராமலிங்கம், சைவப் புலவர் திரு. சு. சி. குலரத்தினம் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

தொடர்ந்து வயலின் சோலோ நிகழ்ச்சியும் அதன் பின்னர் பட்டிமன்றமும் இடம்பெறும்.

''ஔவையார் பாடல்களின் உயிர் நாடி பெரிதும் தங்கி நிற்பது அவரது கருத்திலா? கற்பனையிலா?'' என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமண்டபத்திற்கு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் நடுவராகக் கடமையாற்றுவார்.

இறுதியாக 'ஔவையார்' என்ற தலைப்பில் வில்லிசை நிகழ்ச்சி நடைபெறும்.

## வவுனியாவிலிருந்து வெளிநாட்டுக்கு தொலைபேசி

கொழும்பு, மார்ச் 30

வவுனியாவிலிருந்து கொழும்புக்கும் வெளிநாடுகளுக்கும் இடையேயான தொலைபேசித் தொடர்பு வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வரை மூன்று இணைப்புகள் மூலம் இயங்கிய தொலைபேசிச் சேவை, இப்போது பத்து இணைப்புகளுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

வவுனியாவில் ஏஜன்ஸி தபால் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக முப்பதுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் தபால் அமைச்சுக்குக் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. [உ-எ]

# ''உதயன்'' வெற்றிக்கிண்ண இறுதியாட்டம் சனியன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 30

''உதயன்'' வெற்றிக் கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் சனிக்கிழமை [4ஆம் திகதி] நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதும்.

போட்டியில் மூன்றாமிடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக அன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதும்.

அன்றைய தினம் ஷப்றா அணிக்கும் டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் காட்சி உதைபந்தாட்டப் போட்டி ஒன்றும் நடைபெறவிருக்கிறது.

இந்த ஆட்டங்கள் பருத்தித்துறை திக்குமுனையில் உள்ள ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

**அரையிறுதி முடிவுகள்**

இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த 27, 28ஆம் திகதிகளில் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதியில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி வல்வை புளூஸ் விளையாட்டுக் கழக அணியை 3 — 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

மற்றைய அரையிறுதியில் திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழக அணி கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை 4 — 2 என்ற கோல் கணக்கில் வென்றது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க உதவுகின்ற ஆய்வுகளே தேவை

## வெளியீட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 30
தமிழீழ வாதம் என்ற கருத்து நிலையினை மேலும் மேலும் வலுப்படுத்த நாம் எந்த எந்த நிலைகளுக்குச் செல்லவேண்டும் என்பதை ஆய்வுகள் தீர்மானிக்க வேண்டும்.

தனி ஒரு துறையிலான ஆராய்ச்சிகள் அண்மைக்காலமாக அருகி வருகின்றன. பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க உதவுகின்ற ஆராய்ச்சிகள் தான் இப்போது அதிகம் அவசியம். செய்யப்படுகின்ற ஆய்வுகள் ஆராய்ச்சிகள் அனைத்துமே விதிமுறைகளுக்கு ஏற்றவாறு அதேவேளை நல்லதையும், கெட்டதையும் கூறுவனவாக இருக்க வேண்டும்.

இப்படிக் கூறினார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

''தமிழீழ நோக்கு'' சஞ்சிகையின் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்தியபோதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடியேற்றங்கள் பற்றி ஆய்வு செய்யும்போது வடக்கு—கிழக்குப் பிரதேசத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற ஆராய்ச்சிக்கு அப்பால் சென்று இங்கு ஒரு சமூகம் வாழ்ந்தது. அதன் தன்மை, உறவு முறைகள், அது எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்கியது என்ற பார்வையை வளர்த்தால் தான் அதை நாம் ஆதாரபூர்வமாகக் காட்ட முடியும்.

சமூகம் வலுப்பெறும் போது தான் அந்த அரசு வலுப்பெறும். சமூக உருவாக்கம் என்பது பன்முகப்படுத்தப்பட்ட முறையிலான ஆய்வுகளால் செய்யப்பட வேண்டியது — என்று கூறினார்.

கலாநிதி சபா ஜெயராசா தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

### அறிவியல் தளத்தில்....

சஞ்சிகை பற்றிய தமது ஆய்வுரையில் திரு. மு. திருநாவுக்கரசு கூறியதாவது:-

தமிழ் மண்ணில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடியேற்றங்கள் நடந்து வருகின்றன. ஆனால் அதை அறிவியல் தளத்தில் வைத்து ஆதார பூர்வமாய் நிரூபிப்பதற்கு — வெளிப்படுத்துவதற்கு யாருமே முயலவில்லை. அதற்குப் பின்னணியில் பலமான தேசியத் தலைமை ஒன்றும் தமிழர்களுக்கு இருக்கவில்லை. இப்போதுதான் அறிவியல் தளத்தில் நின்று அது பற்றி ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளனர் — என்றார்.

### அரசியலே காரணம்

திரு. யோகரட்ணம் யோகி வாழ்த்துரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழீழத்தின் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் அரசியல் காரணங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டு வந்தன. பொருளாதாரக் காரணங்களுக்காகவே அவை ஆரம்பிக்கப்பட்டன என்று இப்போதும் சிலர் ஆய்வு செய்து வருவது தவறு.

யாழ். பல்கலைக் கழகம் இந்த மண்ணின் மிகப் பெரிய சொத்து அது எமக்குப் பயன்படாது போவதை ஏற்றுக் கொள்ள முடியாது — என்றார்.

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தமது உரையில், மண்ணையும், பொருளாதாரத்தையும் பாதுகாக்கிற அளவுக்குத்தான் எமது சுய நிர்ணயம் பாதுகாக்கப்படும் — என்றார்.

(அ-5)

## உண்ணாவிரதம்

தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவாக இடம்பெற்று வரும் உண்ணா விரதமும், கருத்தரங்கும் இன்று தென்மராட்சிப் பகுதி கெற்பலியில் நடைபெறும். அன்பரசி, சண்முகநாதபிள்ளை, சேரலாதன் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றுவர்.

[த]

## மருந்து வகைகள் வந்தன

தென்மராட்சி, மார்ச் 30
சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு விசர்நாய்க்கடி தடுப்பு மருந்து, ஏற்புவலி தடுப்பு மருந்து மற்றும் சலரோக ஊசி மருந்து ஆகியவை கடந்த புதன்கிழமை வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

[த-117]

## ஜெனரேட்டர் கொண்டு வர அனுமதி மறுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 30
மானிப்பாயில் தற்போது இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மனநோயாளர்களுக்கு, மின்சார சிகிச்சை அளிப்பதற்கு அவசியமான ஜெனரேட்டர் ஒன்றை வழங்க கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது.

சிகிச்சையளிப்பதற்கு ஜெனரேட்டரின் அவசியம் பற்றி யாழ். சுகாதாரப் பகுதியினர் விளக்கிய போதிலும் கூட அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

[த-3]

## புத்தாண்டை வடக்கில் கொண்டாட பௌத்த பிக்குகள் விரும்புகின்றனர்

கொழும்பு, மார்ச் 30
சித்திரைப் புத்தாண்டை வடபகுதியில் கொண்டாட விருப்பம் தெரிவித்துள்ள பௌத்த தூதுக் குழுவினர், திரு. பிரபாகரனைச் சந்திப்பது இன்னும் உறுதி செய்யப்படாததினாலேயே வட பகுதி விஜயம் காலதாமதமாவதாக அறிவித்துள்ளனர்.

''பௌத்த பிக்குகள் தமிழ் மக்களின் விரோதிகள்; இனத்துவேஷிகள் என்ற தவறான கருத்து உலக நாடுகளில் பரவியுள்ளது. ஆனால் நாமும் அமைதி விரும்பிகளே. சமாதானத்தை நாமும் விரும்புகின்றோம். அதனால்தான் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்தி இச்சண்டையை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகின்றோம். அதனால்தான் யாழ்ப்பாணம் செல்ல விரும்புகின்றோம்' —

இவ்வாறு சங்கைக்குரிய மாதம்பமதுமே அஸ்வஜித் தேரர் விவரித்தார்.

யாழ். செல்லவுள்ள பௌத்த பிக்குகள் குழுவில் இவரும் இடம் பெறவிருக்கின்றார்.

திரு. பிரபாகரனுடைய சந்திப்பை உறுதி செய்து கொள்வதில்தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-எ)

## வெப்பம் அகோரம்!

கொழும்பு, மார்ச் 30
நாட்டின் வெப்ப நிலை இரண்டு முதல் மூன்று சென்றிகிரேட் வரை அதிகரித்திருப்பதாக் கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்தது. யாழ். குடாநாட்டிலும் நாளுக்குநாள் வெப்பம் அகோரமாகி வருகிறது.

இலங்கைக்கு மேலாக சூரியன நகர்ந்து கொண்டிருப்பதாலும், வளிமண்டல ஈரலிப்புத் தன்மை குறைந்துள்ளதாலும் பகலும் இரவும் கடும் வெப்பம் நிலவுவதாகவும்—

மே மாதத்திற்கு முன்னர் நாட்டின் எந்தப் பகுதியிலும் பெருமழை பெய்யாது என்றும்— வானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்தது. (அ)

## மார்க்ஸீயவாதிகளின் கதிர்காம யாத்திரை

### ஜனாதிபதி கிண்டல்

கொழும்பு, மார்ச் 30
கார்ல்மார்க்ஸில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் இப்போது தமது ஈடேற்றத்திற்காக கதிர்காமம் நோக்கிக் கால்நடை யாத்திரை மேற்கொண்டுள்ளனர். இது மகிழ்ச்சிக்குரியது.

ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு சொன்னார்.

லுணுகம்வெஹார நீர் விநியோகத் திட்டத்தை ஜனாதிபதி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அதன் பின்னர் அவர் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினார்.

ஆண்டவனையும், சமயத்தையும் கேலி செய்தவர்கள் இன்று கதிர்காமத்தானிடம் மன்னிப்புக் கேட்கிறார்கள் என்றும் ஜனாதிபதி சொன்னார்.

மத நிந்தனையில் ஈடுபட்டவர்கள் இன்று தமது தவறை உணர்ந்து விட்டனர்; இதனால் கொதிக்கும் வெய்யிலில் மைல் கணக்கில் நடந்து சென்று பிராயச்சித்தம் செய்கின்றார்கள் என்றும் திரு. பிரேமதாஸா கூறினார்.

(த-எ)

## ஆய்வு நிறுவனம் ஆலோசனை வழங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 30
உயிரியல் வாயுக்கூடங்கள், சூத்திரங்கள் என்பன திருத்தி அமைக்கப்படவேண்டிய நிலையில் இருப்பின் அவற்றைத் திருத்தி மீள அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கத் தாம் தயாராக இருப்பதாக தமிழீழ ஆய்வு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

[த-5]

புனர்வாழ்வளிக்கப்பட்ட

## 50 ஜே. வி. பி. தீவிரவாதிகள் இலங்கை இராணுவத்தில்

கொழும்பு, மார்ச் 30
புனர்வாழ்வளிக்கப்பட்ட 50 ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கு இலங்கை இராணுவத்தில் சேர்ந்து பணிபுரிய இடமளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டதன் பின்னர்தான் இராணுவத்தில் இவர்கள் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இவர்களில் 16 பேர் பலாலி இராணுவ முகாமில் பணிபுரிய அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வடக்கில் போரிடும் படையினருக்குத் தேவையான காய்கறிகள் பயிரிட இவர்களை இராணுவம் பயன்படுத்தி வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

'சண்டே ரைம்ஸ்' இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

[த-எ]

## பாடசாலைக்கு அன்பளிப்பாக 3 பரப்புக் காணி

பருத்தித்துறை, மார்ச் 30
குடத்தனை கரையூர் றோ.க. த. க. பாடசாலைக்கு மூன்று பரப்புக் காணி அண்மையில் சட்டபூர்வமாக அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இது தொடர்பான ஆவணங்கள் காணியின் உரிமையாளர் திரு. வின்சென்ட் டீபோலினால் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (த-11, 8)


## பண்ணை முகாமையாளர் தேவை

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விரைவில் ஆரம்பமாக இருக்கும் மாதிரிப் பண்ணை பயிற்சி நிலையத்திற்கு கீழ்வரும் தகுதியுடைய முகாமையாளர் தேவை.

| | |
|---|---|
| முன் அனுபவம்: | பண்ணை நடத்தியதில் 5 வருட அனுபவம். |
| தகைமை: | விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| வயதெல்லை: | 35 — 50 வரை |
| ஊதியம்: | தகைமைக்கேற்ப |
| தொடர்பு: | 10-04-1992இற்கு முன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். |

தலைவர்,
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
இல. 3, கண்டி வீதி,
பஸ்தியான் சந்தி,
யாழ்ப்பாணம்.

[20276]

## தீவக பாக்கியம் குழந்தைகள்
## ★ வைத்தியசாலை ★

K. K. S. வீதி மனோகராச் சந்திக்கு அருகாமையில் காலை 8-30 தொடக்கம் பிற்பகல் 1-30 வரையும்.

கல்வியங்காட்டிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தியில் காலை 8-30 முதல் மாலை 6-30 வரையும் சேவையாற்றும்.

[20285]

## கொழும்பில் வர்ண புகைப்பட பிரதியாக்கம்:

★ போட்டோ குறோம்
— Photo Chorome LAB. (Ltd.)

★ மாஸ்டர் கலர்
— Master Color LAB. (Ltd.)

ஆகிய ஆய்வு கூடங்களில் பிரதியாக்கம் செய்வதற்கென 21 — 03 — 1992 இற்கு முன் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதி செய்யப்பட்டு தயாராக உள்ளன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி;

முகாமைத்துவம்,

**கலக்சி** புகைப்பட சேவை

337, 1ஆவது மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[20288]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம், சாவகச்சேரி.

[சி-1723]

## விற்பனையாகின்றது

ஏப்ரலில் நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான, துரித மீட்டல் வினா-விடைப்பயிற்சிகள் கணிதம் 5 வினாத்தாள்கள், தமிழ் 5 வினாத்தாள்கள். ஆக்கம்: திருமதி ப. இளங்கோ. [உடுவில் மகளிர் கல்லூரி] வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

[சி/1742]

## மாதிரி வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4577)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4578]

## திருத்த வேலைகள்

உங்களுடைய பழுதடைந்த பிரயாணப் பைகள், பாடசாலைப் பைகள், மகளிர் கைப்பைகள் என்பவற்றை எமது தொழிற்சாலையில் புதியதாக திருத்திக் கொடுப்போம். ராம்சன்ஸ் பிரயாணப் பொருள்கள் தொழிலகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

[20183]

## ஜோஸ்யரின் ராசிபலன்

நாடறிந்த சோதிடர் ஜோஸ்யரின் கணிப்பில் ஆங்கிரச வருஷம் பிறக்கும் சுப நேரம், கைவியளம் வாங்குதல், வேலை ஆரம்பித்தல், பன்னிரண்டு இராசிகளுக்கும் வரவு, செலவு பலன்கள் ''ஜோஸ்யரின் ராசிப்பலன்'' என்று கேளுங்கள். அதிக பக்கங்கள். விலை ரூபா 9-75.

[20253]

## பொது அறிவு நூல்

கிராம சேவை அலுவலர் — ஆரம்பப் பள்ளி ஆசிரியர் தெரிவுப் பரீட்சைகள் - 1992 ஆகியவற்றுக்கு உகந்த பயனுள்ள நூல் — தொகுப்பாசிரியர்: த. ந. பஞ்சாட்சரம். விலை ரூபா 60/-. சகல முன்னணிப் புத்தகசாலைகளிலும் கிடைக்கப்பெறும்.

[சி/1690]

## சிறுகதை எழுத

'சிறுகதை எழுத விரும்புவோருக்கு எனது பட்டறிவுக் குறிப்புகள்' வரதர் எழுதியது ரூபா 18/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

[சி-1698]

## நாடக நூல்கள்

கவிஞர் சோ. பத்மநாதனால் ''நகைச்சுவையின் தோளில் ஏறிச் சவாரி செய்யும் நாடகங்கள்'' என்று பாராட்டப்பட்ட அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்கள் ''கெட்டிக்காரர்கள்'' ரூபா 25/-. ''முதலாம் பிள்ளை'' ரூபா 30/-. எங்கும் பெற்றுக் கொள்ளலாம்.

[20164]

## விடுதலை

கொழும்பு, மார்ச் 30

ஊவாமாகாணத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட தமிழ் இளைஞர்கள் விசாரணையின் பின்னர் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

அமைச்சர் தொண்டமான் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனும் பிரதம மந்திரியுடனும் இது பற்றித் தாம் பேசியதாகவும் அவர் தெரிவித்தார். (த)

---

உ

பரந்தன் 3ஆம் வாய்க்கால்

**பன்னைக்கண்டிப் பிள்ளையார் ஆலய**

# ★ மஹோற்சவ விழா ★

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | — | 05-04-1992 | ஞாயிற்றுக்கிழமை |
| தேர்த்திருவிழா | — | 13-04-1992 | திங்கட்கிழமை |
| தீர்த்தத்திருவிழா | — | 14-04-1992 | செவ்வாய்க்கிழமை |

அனைவரும் வருக! விநாயகன் அருள் பெறுக!!

- ஆலய பரிபாலன சபை.

3ஆம் வாய்க்கால்,
பரந்தன்.

(20257)

---

# ஆங்கில மொழிப் போதனை

பாடசாலை விலகிய

**A/L வெளிவாரி**

G. A. Q. / Commerce,

தொழில் நுட்பக் கல்வி பெறும் மாணவர்களுக்குரியது.
ஒருங்கிணைந்த விரிவான கற்கை நெறி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

★ 6 மாதக் கற்கைநெறி ★
திங்கள், புதன் பிற்பகல் 3 — 5 வரை

புதிய பிரிவு ஆரம்பம்:
**04-04-1992 சனி 3 மணி**
நேர சூசி: சனி, ஞாயிறு } 3 — 5


ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY ROAD, JAFFNA.

[சி-1691]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04 — 04 — 1949

உதிர்வு: 30 — 03 — 1991

அமரர்

## தம்பித்துரை தனஆனந்தம்

(தனம்)

( 1 ஆம் வட்டாரம், மண்டைதீவு )

ஆண்டு ஒன்று ஆனதே ஐயா! இன்னும் எங்கள் துயரம் ஆறாமல் தவிக்கின்றோம் — என்று உங்கள் இன்முகம் காண்போம். ஏங்குகின்றோம், எப்பொழுதும் கண்ணீரே!

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்.

179, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(4585)

---

# இன்று ஏல விற்பனை

இன்று 30-03-1992 காலை 10-30 மணிக்கு நல்ல தரமான வேம்பு, மலை வேம்பு போன்ற மரங்கள்

தொடர்பு:

**பா. நித்தியானந்தன்,**
மட்டுவில் மகா வித்தியாலயம்,
சாவகச்சேரி.

[20281]

---

யா/வேம்படி மகளிர் கல்லூரி

# நூலகர் வெற்றிடம்

விண்ணப்பதாரிகள் தகைமைகள்:

1. இலங்கை நூலகர் சங்க முதலாம் வருடப் பரீட்சை அல்லது மேற்பட்ட பரீட்சையில் சித்தி.
2. ஆங்கில அறிவு.
3. தமிழ், ஆங்கில தட்டெழுத்துத் தகைமை.
4. 40 வயதுக்கு உட்பட்ட பெண்கள் மட்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: **30—04—1992.**

- அதிபர்.

[சி-1734]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 07 — 09 — 1924

மறைவு: 29 — 02 — 1992

## சிற்றம்பலம் ஆறுமுகம்

பண்பின் பிறப்பிடமான அன்புத் தெய்வமே!
மாதம் ஒன்று போனாலும் - உங்கள்
பொன்னான நினைவுகள் எம்மை
விட்டு என்றும் அகலா.

உங்கள் ஆத்மா சாந்தி பெற என்றென்றும் பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். உற்றார்,
உறவினர்கள்.

5 ஆம் வாய்க்கால்,
வீரவாகு கமம்,
கிளிநொச்சி.

[4587]

---

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05—07—1905

மறைவு: 23—03—1986

திதி: 30 03-1992

## அமரர் கனகம்மா விசுவலிங்கம்

அன்பு அம்மா! எத்தனை கோடி ஆண்டுகள் சென்றாலும் எங்கள் உள்ளத்தில் ஒளி வீசும் உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தை விட்டகலா.

உங்கள் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வி. மகாலிங்கம்,
267, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(4584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## விசர்நாய்க் கடி ஆபத்து

நாட்டின் வெப்ப நிலை இரண்டு முதல் மூன்று வரையான சென்டிகிரேட்டுகளால் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வளிமண்டலத்தின் வழமையான ஈரலிப்புத் தன்மை குறைந்து விட்டது. அதுவே வெப்பம் அதிகரிக்கக் காரணமாம்.

வெப்பம் கூடியுள்ளதால் நாய்களுக்கு விசர் நோய் உண்டாகும் ஆபத்து உண்டு என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி ஏற்கனவே எச்சரித்திருந்தார். கடந்த இரண்டு மூன்று மாதங்களிலும் நாய்க்கடிக்கு ஆளானோரின் புள்ளி விவரங்கள் அந்த எச்சரிக்கை கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது என்பதை ஊர்ஜிதம் செய்கின்றன.

விசர் நாய்க் கடிக்கு ஆளானோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகப் புள்ளிவிவரங்களும், யாழ். போதனா ஆஸ்பத்திரி புள்ளி விவரங்களும் வெகு துலாம்பரமாகக் காட்டுகின்றன.

போரினாலும், பொருளாதாரத் தடையினாலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை போசாக்கின்மை, உளவியல் தாக்கம், தொற்று நோய்கள் என்பன போன்ற பல பிரச்சினைகள் எதிர்நோக்கியுள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக விசர்நாய்க் கடியும் இப்போது சேர்ந்துள்ளது. முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக அதுவும் தோற்றம் எடுத்துள்ளது.

விசர் நாய் கடித்த ஆரம்பத்திலேயே விசர்நாய்க்கடி நோய் ஏற்படாமல் தடுக்க வேண்டும். அதற்குத் தடுப்பூசிகள் உண்டு. அவற்றைச் சரிவர பெறாத நோயாளிக்கு விசர்நாய்க்கடி நோய் அறிகுறிகள் தென்பட்டு விட்டால் பின்னர் மாற்ற முடியாது. முடிவு மரணமேயாகும்.

விசர் நாய் கடிக்காமலே விசர்நாய்க் கடிநோய் ஒருவரைப் பீடிக்கலாம் என்பது இன்னொரு உண்மை. விசர் நாய்க்கு அருகில் செல்லும் ஒருவருக்குக் காலில் புண் இருந்து விட்டால், நாயின் எச்சிலில் இருந்து கிளம்பும் கிருமிகள் புண்ணில் சேர்ந்து அவருக்கும் விசர் நாய்க்கடி நோய் வரும் என்று கூட வைத்தியர்கள் எச்சரிக்கிறார்கள்.

இந்நிலையில் விசர்நாய்க் கடிநோய் பெரும் எண்ணிக்கையில் மக்களை மரணமடையச் செய்யும் ஒன்றாக (Epidemic) மாறும் பேராபத்து உருவாகி வருகிறது. இது குறித்து சுகாதாரப் பகுதியினர், ஆஸ்பத்திரிகள், உள்ளூராட்சி சபைகள் ஒன்றிணைந்து தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாகிறது. சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்கள் மற்றும் தொண்டர் அமைப்புகள் அவற்றுக்கு உதவலாம்.

விசர்நாய்க்கடி நோய்த் தடுப்பூசி மருந்து (ஏ.ஆர்.வி.) கொழும்பில் இருந்து போதியளவு அனுப்பப்படுவதில்லை அதனால் விசர்நாய்க் கடி நோயினால் மரணங்கள் பெருகும் அபாயமும் உண்டு.

நாய்களை வீடுகளில் கட்டி வளர்த்தல், அவற்றுக்குத் தேவையான நோய்த் தடுப்பூசிகளை ஏற்றுதல், கட்டாக்காலி நாய்கள் தொல்லையை நீக்குதல் ஆகிய தடுப்பு நடவடிக்கைகளில் முழுக்கவனமும் செலுத்தப்பட வேண்டும்.

இதனையும் ஒரு போர்க்கால நெருக்கடியாகக் கருதி நாய்க்கடியில் இருந்து மக்களைக் காப்பாற்ற உருப்படியான செயற்பாடுகள் பரந்தளவிலும் உடனடியாகவும் நடைமுறைக்கு வரவேண்டும்.

# தமிழினம் தனித் தேசிய இனமே என்று இடித்துப் பதித்தவர் செல்வா

தந்தை செல்வநாயகத்தின் 94 ஆவது பிறந்த தினம் நாளை மார்ச் 31 ஆம் திகதியாகும்.

அதனையொட்டி 1981 ஆம் ஆண்டில் அவர் நினைவாக கலாநிதி அ. ஜெ. வில்சன் நிகழ்த்திய நினைவுப் பேருரையில் இருந்து ஒரு பகுதியைத் தொகுத்துப் பிரசுரிக்கிறோம்.

தமிழ் பேசும் மக்களிடையே தாம் தனியான ஓர் இறைமையுள்ள தேசிய இனம் என்ற சிந்தனை அலைகளைக் கிளப்பி வைத்தார் திரு. செல்வநாயகம். உள் நாட்டில் விவாதத்துக்கும், பூசலுக்கும் உரித்தாயிருந்த தமிழர் பிரச்சினை இப்பொழுது உள்நாட்டு விடயம் மாத்திரமன்றி, அயலிலுள்ள இந்தியாவின் அரசியலில் பேசப்படும் விடயமாக விரிவடைந்து இப்பொழுது ஓர் அனைத்துலகப் பிரச்சினையாக அது முதிர்ந்து விட்டது.

## மொழியும் பிரதேசமும் பிரிக்க முடியாதவை எனவும் அவர் தெளிவுபடுத்தினார்

தமிழ் மக்களின் உள்ளத்து உணர்வுநிலை மட்டத்துக்குக் கீழேயுள்ள இருண்ட கொந்தளிப்புகளிடையே திரு. செல்வநாயகத்தின் கூர்மதி பரந்தளாவியது. புதுப் புதுச் சிந்தனைகள் கருத்துக்கள் என்று பற்பல மணிகள் உள்ளத்தின் மேல்மட்டத்துக்கு வந்தன.

இவை அனைத்தையும் அவர் தொடுத்துக் காட்டித் தமிழரின் அறிவுப்பலத்தை விரிவாக்கினார். ‘குடியேற்றம்’, ‘பாரம்பரியத்தாயகம்’, ‘தமிழ் பேசும் மக்கள்’, ‘மலை நாட்டுத் தமிழர்’, ‘மொழியிலிருந்து பிரிக்கவொண்ணாத பிரதேசம்’, ‘இணைப்பாட்சி’, ‘ஈழம்’, என்று பற்பல கருத்துணர்வுகளைப் பரவித் தெளித்தார். இவை அனைத்தும் தமிழ் பேசும் மக்கள் வாழ்க்கையில் மாத்திரமல்ல இலங்கை அரசியலிலுள்ள மேல்மட்டத்தவர் அனைவரினதும் நாவிலும் இடம் பெற்றன.

### எல்லைகளை விசாலித்தார்

இப்புதுச் சொற்றொடர்கள், கருத்துக்கள், சிந்தனைகள் அனைத்தையும் பிரயோகித்துத் திரு. செல்வநாயகம் தமிழ் பேசும் மக்களின் அறிவு நிலை மனத்தின் எல்லைகளை விசாலித்தார். ‘இலங்கை நாட்டினம்’ என்ற கருத்தற்ற ஒரு பெரும் உடலில் ஒரு சிறு உறுப்பாக விளங்கும் ஓர் அற்ப அலகு அல்ல தமிழினம். தமது சொந்த மிடுக்கிலேயே தாம் ஒரு தனி இனம் என்ற உணர்வைத் தமிழ் பேசும் மக்கள் மனதில் இடித்திடித்துப் பதித்தார் திரு. செல்வநாயகம்.

இப் பெருஞ் சாதனையை இவர் எவ்வாறு செய்ய முடிந்தது? தமது மக்களின் உரிமைப் பசிக்கு அவர் உணவளித்தார். நெருக்கடிக்கட்டத்தில், குழப்பத்தில், நிச்சயமின்மையில் தமது சமுதாயத்தினதும் கலாசாரத்தினதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள், பண்புகள் அனைத்தும் சிதையும் போதும் தமிழ் பேசும் மக்கள் உரிமை உணர்விற்குட்பட்டனர்.

1954 க்குப் பிந்திய காலத்தில் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு தலைதூக்கவே தமிழ் பேசும் மக்களின் செம்மை நிலையின் அடிப்படை ஆட்டங்கண்டு விட்டது. அந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் தமக்கு ஒரு புதிய சமுதாய அமைப்பை, இதுவரை இத்துணை சுகமாக வாழ்ந்து தற்பொழுது அருகிவருவதுமான அந்த இதமான உலகத்தின் வேதனைகள், பிரச்சினைகளுக்குப் புதியதொரு பரிகாரத்தைத் தரவல்ல தலைவன் ஒருவனைத் தேடலுற்பட்டார்கள்.

தமிழ் பேசும் மகன் ஆதரவற்றவனாயினான். தனது வாழ்க்கைக்குக் கருத்தளித்து வந்த வளம் அனைத்தும் அவனிடமிருந்து பறிக்கப்பட்டன. இந்த நிலைமையில் குழந்தைப்பருவத்துக்குள் பின்வாங்கிச் செல்ல ஆரம்பித்தான்.

### தமிழருக்குக் கண்டம்

இப் பொழுது அவனது வாழ்வு முற்றிலும் இனிப் புதிதாகத் தொடங்க வேண்டும்.

இந்த எதிர்பாரா நெருக்கடிச் சகாப்தத்தில் சூடு பிடிக்க ஆரம்பித்ததும் திரு. செல்வநாயகம் போன்ற ஒரு நெருக்கடிகாலத் தலைவன் தோன்றியே ஆகவேண்டியிருந்தது. தக்க தருணத்தில் தக்க தலைவன் தோன்றுவதற்கான உதாரணம் இது. அத்தகைய தலைவர்கள் யுத்த பிரளயம், புரட்சி, வெகுஜனச் சிந்தனை வெள்ளம் என்பவற்றை ஏற்படுத்தும் வன்மை பெற்றவராக இருப்பர் என ஒஸ்ஸ்றிறெற்ஷ்மர் வலியுறுத்துகின்றார். எங்கிருந்தென்று தெரியாது முளைத்து வெடித்த இந்தச் சக்திகளுக்குத் தலைமை அளிக்கத் தேவைப்படும் அந்த வன்மையும், திறமையும் திரு. செல்வநாயகம் அவர்களிடம் பெரிதும் இருந்தன.

தலைமை அளிப்பதுடன் அவர் நிற்கவில்லை. அதற்கும் மேலாக அவர் இம் மக்களின் மனச்சலிப்புகள் நம்பிக்கை இழந்த நிலை ஆகியவற்றை ஆற்றுப்படுத்தி ஆக்கபூர்வமான எதிர்ப்பு மனோ நிலையை ஊட்டிப் பலமான எதிர்ப்பைக் கட்டி எழுப்பினார். தமிழ் பேசும் மக்களுக்கு அவர் தந்தைவடிவம் ஆனார். தம்மைச் சுற்றியமைந்த தமது உலகம் அனைத்தும் சிதைந்து விழுந்து கொண்டிருக்கவும், மனச்சோர்வும், ஆதரவின்மையும் மேலோங்கி அமுக்கவும் தமிழ் பேசும் மக்கள் குழந்தைப் பருவத்துக்குள் நுளைவதைவிட வேறெதையும் செய்ய வழியற்றவரானார்கள்.

இந்தக்கட்டத்தில் இம்மக்களுக்கு தந்தை வடிவத்தில் புதிய சமுதாய நிச்சயம் ஒன்றை அவரால் நிருமாணிக்க முடிந்தது. சரியான இந்தத் தக்கதருணத்தில்தான் திரு. செல்வநாயகம் தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் புதிய ஒரு கருத்தும், புதிய ஒரு தெம்பும் அளிக்க ஆரம்பித்தார்.

அவரிடம் ஒரு நிச்சயத் தன்மை இருந்தது. அவரது உலகநோக்கிலும் மனக்காட்சியிலும் ஒரு கனவு ஒரு தோற்றம் பலருக்கு யதார்த்தமற்றதாகத் தெரிந்ததும் அவருக்கு முற்றிலும் உண்மையானதுமான ஒரு அரசியற் தீர்வு இருந்தது. இந்த நிலைமை இன்று நேற்றல்ல, எல்லாம் இனிமையாக இருந்தது 1949 இல் ‘‘அந்தப் பொன்னான காலத்தில்’’ அவர் கண்ட கனவும் அதுவே.

அந்தக் காலத்தில் எவருக்கும் அடையவே முடியாதெனத் தோன்றியதும் எவருமே நம்பமுடியாததுமான அரசியற் பரிகாரம் ஒன்றைக் கருவாக்கினார் அவர். இணைப்பாட்சி அமைப்பொன்றாக அமையும் இலங்கையிலே அவர் தமிழ் பேசும் மக்களின் மொழியையும், கலாச்சாரத்தையும், வாழ்விடத்தையும் பாதுகாக்க விரும்பினார். மொழியும் வாழ்விடமும் இணைபிரிக்கமுடியாதவை என்று இடித்து இடித்து உரைத்தார்.

சிங்களக் குடியேற்றத்தினால் தமிழர் பூமி அழிந்து போகாது காப்பாற்ற அவர் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று நான் எச்சரிக்கையாகக் கேட்ட பொழுது அவரது பதில் அவரது தனி முத்திரையை அடித்துக் காட்டியது. மூன்று சந்தர்ப்பங்களில போலாந்து நாட்டின் பெரும் பகுதிகளை அந்நாட்டின் ஆக்ரோஷமிக்க அயலவர்கள் அபகரித்தார்கள். மூன்றாவது தடவையில் போலாந்து நாடே ஐரோப்பாப் படத்திலிருந்து அழிக்கப்பட்டு விட்டது. போலாந்து ஒரு நாட்டினம் என இல்லாதொழிந்தது. ஆயினும் 1வது உலக யுத்தத்தின் பின்னர் அந்நாடு இறைமையுள்ள அரசு ஒன்றாக மீளவும் அமைக்கப்பட்டு இன்றுவரை உயிர் வாழ்கின்றது என்றார் அவர். எனவே நாம் ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும் என்று வினவினார்.

வரத்துக்காரராகிய போர்த்துக்கேயர் 1618 இல் வட இலங்கையிலிருந்து தமிழ் அரசை அழித்தொழித்த பின்னர் தமிழ்த் தேசிய இனத்துக்கு உயிரூட்டி மீண்டெழும்ப வைத்தார் திரு. செல்வநாயகம். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், இந்தியத்தமிழர், பறங்கியர் அனைவரும் இந்நாட்டினத்தின் உறுப்பினராகக் கருதப்பட்டனர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழும் சுதந்திரத்தையடுத்து 1947 முதல் 1956 வரையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் யாழ்ப்பாணத் தமிழர், மன்னார்த் தமிழர், வவுனியாத் தமிழர், திருகோணமலைத் தமிழர், மட்டக்களப்புத்தமிழர், கொழும்புத் தமிழர், இந்தியத் தமிழர் என்று பிரிந்து நின்றனர். திரு. செல்வநாயகத்தின் தலைமையில் தமிழ் மக்களின் இப்பல்வேறு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றாகத் திரண்டனர். புதிய தேசிய இனம் ஒன்றை நிறுவினார் திரு. செல்வநாயகம். இது சிங்களத் தேசிய இனத்திலிருந்த வேறான ஒன்று.

தமிழ்த் தேசிய இனத்தை இவர் மீண்டும் உருவாக்கியது தான் இவரது மாபெரும் சாதனை; தமிழ் பேசும் மக்களின் சமீபகால வரலாற்றில் அபூர்வம் மிக்க நிகழ்ச்சி. இதைச் சாதிப்பது உண்மையிலே மிகக் கடினமான காரியம் என்று அவர் ஒரு முறை என்னிடம் கூறினார். தமிழ் மகன் மூளையுள்ளவன், கெட்டிக்காரன், எனவே சமுதாயம் என்றில்லாது பெரிதும் தன்னினைவு நிரம்பியவன் என்று கூறினார்.

இவரது காலத்துக்கு முன்னர் இருந்த தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்களுடனும் ஏனையோருடனும் ஐக்கிய இலங்கையில் தமிழ் மக்கள் எவ்வாறு ஒன்றாக வாழலாம் என்பதுபற்றியே பேசினார்கள். அது சாத்தியமானது அல்ல என்பதைத் தீர்க்கதரிசி செல்வநாயகம் தெரிந்து கொண்டார்.

எனவே தான் உருவாக்கிய தமிழ்த் தேசிய இனத்தைத் தனித்துவத்துடனும்பிறிதானதாகவும் உறுதியான ஓர்அடித்தளத்திலிட நடவடிக்கை எடுத்தார். அரசியலில் சுதந்திர இறைமையுள்ள அரசு ஒன்றை அவர்நிறுவினாரல்லர். ஆனால் அதற்கு முதற்படியாக அவர் தமிழ் பேசும்மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாகச் சிந்திக்க வைத்தார் இலங்கைத் தீவின் சுதந்திரத்துக்கு முன்னர் சரி பின்னர் சரி அடைய முடியாதென ஆரம்பத்தில் தெரிந்த இந்த இலட்சியத்தை வேறெந்தத் தமிழ்த் தலைவரும் சாதிக்க முடியவில்லை ★

# எண்ணெய் வித்து பயிரிடுதல்: உகந்த பிரதேசம் தெரிவாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

எண்ணெய் வித்துக்களை திட்டமிட்ட அடிப்படையில் பயிரிடுவதற்குப் பொருத்தமான எண்ணெய் வித்துப் பயிரினையும், வட மாகாணத்தில் குறித்த எண்ணெய் வித்து பயிரை பயிரிடப் பொருத்தமான பிரதேசத்தினையும் தெரிவு செய்வது தொடர்பாக குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண விவசாய செயற்திட்டம் வகுத்தல் தொடர்பான தொடர் கருத்தரங்கு அமர்வு அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. பல்கலைக் கழகத் துணைவேந்தர் அ. துரைராசா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கிலேயே மேற்படி குழு தெரிவு செய்யப்பட்டது.

இக் குழுவின் முடிவின்படி தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட எண்ணெய் வித்துப் பயிரைத் திட்டமிட்ட வகையில் விவசாயிகள் பயிரிடத் தேவையான உதவிகளை விவசாய விரிவாக்கப் பகுதி, விவசாய ஆராய்ச்சிப் பகுதி என்பனவற்றுடன் இணைந்து தமிழீழ ஆய்வு நிறுவனம் மேற்கொள்ள உள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். குடாநாட்டிற்கான நிலப் பயன்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கான குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

11 பேர் கொண்ட இக் குழுவிற்கு யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறை தலைவர் செ. பாலச்சந்திரன் தலைமை வகிப்பார்.

இக்குழுவின் முதற் செயற்பாடு யாழ். மாவட்டத்தின் நிலப் பயன்பாட்டுத் திட்ட அறிக்கையை தற்போதைய நிலைக்கு ஏற்றவாறு தயாரிப்பதுடன், ஒரு மாத காலத்திற்குள் இது தொடர்பான முதலாவது அறிக்கையினை வெளியிடுவது என்றும் கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

சிறுதானியச் செய்கையை ஊக்குவிப்பது தொடர்பாக எடுக்கக்கூடிய முடிவுகள் பற்றி துறைசார்ந்த நிபுணர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துகளும் கருத்தரங்கில் ஆராயப்பட்டன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆழ்வாப்பிள்ளை புனிதசபாபதி

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை புனிதசபாபதி (நெல்லியடி மஞ்சு மோட்டோர்ஸ் உரிமையாளர்) 28-03-92 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் கமலநாயகியின் அன்புக் கணவருமாவார். அவரது இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
''கமல வாசம்''
கரவெட்டி மேற்கு. ஆழ்வாப்பிள்ளை ஆனந்தசபாபதி
[20287]

## சுப்பிரமணியம் கமலாம்பிகை

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், சாவகச்சேரியில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் கமலாம்பிகை 29-3-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பையா, வள்ளியம்மையின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் நாகம்மாவின் அன்பு மருமகளும், சனகம்மா, பரமலிங்கம், சாந்தலிங்கம், வரதலெட்சுமி, கலாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலிங்கம், சிவராசா, பரஞ்சோதி அருந்தவமணி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மலிங்கம், தளையசிங்கம், நாகம்மா, தங்கம்மா, பொன்னம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற கைலாயபிள்ளை, குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமாறன், உமா, பிறேமா, ரமா, மணிமாறன், விஜிதா, அமுதா, புவேந்திரன், சைதா, ரமேஸ், குவைனா, யதீஸ், யுகதா, வினோகரன், பகீரதன், ராஜீவ், நர்மதா, சிவநாதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று [30-3-92] திங்கட்கிழமை. காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருமகன் - தர்மலிங்கம்.
[ஆசாரி]
கல்வயல்,
சாவகச்சேரி,
[20282]

## திருமதி நாகலெட்சுமி சண்முகநாதன்

மண்டைதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நாகலெட்சுமி சண்முகநாதன் 16- 02- 1992 அன்று மண்டைதீவில் காலமானார். இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம் சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், திருநெல்வேலியைச் சேர்ந்த நாகமுத்து சண்முகநாதனின் அன்பு மனைவியும், ஓங்காரரூபி சண்முகநாதனின் [வரைவியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்] அருமைத் தாயாரும், திருமதி மகாலெட்சுமி அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் அன்றைய தினம் மண்டைதீவு மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சண்முகநாதன் [கணவன்],
ச. ஓங்காரரூபி [மகள்].
மண்டைதீவு.
[20284]

## திருமதி நாகம்மா செல்லையா

வீமன்காமம் வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது கோப்பாயில் வசிப்பவருமான நாகம்மா செல்லையா அவர்கள் [29-03-1992] ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் காலம்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், திருஞானசம்பந்தமூர்த்தி [இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்]. இராசலட்சுமி, சிவபாதசுந்தரமூர்த்தி [இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்], கனகாம்பிகை, குருமூர்த்தி [பொறியியலாளர் இ போ. ச. பருத்தித்துறை], நகுலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும் பூலோகசிங்கம் [சிறைச்சாலை உத்தியோகத்தர்], காலம்சென்ற செல்வ பாக்கியம் சரஸ்வதி, பாலசுந்தரம் [இளைப்பாறிய அதிபர், யூனியன் கல்லூரி], சிவராசலிங்கம் [இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாடு உத்தியோகத்தர்], தவயோகநாயகி [ஆசிரியை நடேஸ்வராக் கல்லூரி] ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [30-3-1992] பிற்பகல் 2.00 மணியளவில் கோப்பாய் பழைய றோட் இல்லத்திலிருந்து கோப்பாய் மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ குருமூர்த்தி
[மகன்]
பழைய றோட்,
கோப்பாய்.
[20289]

## சுந்தருக்கு சேவை நீடிப்பு?

கொழும்பு, மார்ச் 30

எதிர்வரும் மேமாதத்துடன் இளைப்பாறவிருக்கும் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்துக்கு சேவை நீடிப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

அறுபது வயதைப் பூர்த்தி செய்தவர்களுக்கு மந்திரி சபையே சேவை நீடிப்பு வழங்க முடியும். திரு. சுந்தரலிங்கத்துக்கும், பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெத்தமுலவுக்கும் சேவை நீடிப்பு வழங்கச் சிபார்சு செய்யும் கடிதங்கள் கல்விச் சேவைக் குழு ஊடாக அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டிருப்பதாக மிக நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

திரு. சுந்தரலிங்கத்துக்கு சேவை நீடிப்பு கிடைக்கும் பட்சத்தில் புதிதாக உருவாக்கப்படும் யாழ் கல்வி மாவட்டத்தின் பணிப்பாளராகத் தொடர்ந்து பணிபுரிவார் என்றும்—

வடமராட்சி கல்வி மாவட்டப் பணிப்பாளராக இப்போது மாகாண அமைச்சில் உயர் பதவி வகிக்கும் ஒருவர் நியமிக்சப்படலாம் என்றும்— கொழும்பில் பேச்சடிபடுகிறது. (அ)

## இந்திய உளவுப்பிரிவின் புதிய தலைவர்

புதுடில்லி, மார்ச் 30

இந்தியாவின் புலனாய்வு ஸ்தாபனத்தின் [ஐ. பி] புதிய தலைவராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான வி. ஜி. வைத்தியா ஏப்ரல் முதல் திகதி தொடக்கம் பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த உளவுப் பிரிவின் தலைவராக இதுவரை எம். கே. நாராயணன் இருந்தார். [உ-எ]

## மீண்டும் குடும்ப அட்டை பதிவு

வண்ணார்பண்ணை, மார்ச் 30

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீண்டும் குடும்ப அட்டைகள் பதிவு செய்யும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

குடும்பப் பதிவு அட்டைகள் போதாமையால் இவ்வேலைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களும் தமது குடும்ப அட்டைகளைப் பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [அ-ரி]

## வீட்டில் தொங்கிய சடலம்

குருநகர், மார்ச் 30

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் காணப்பட்டதாகக் கூறப்படும் இவரது சடலத்தில் காயமும், இரத்தக் கறையும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

மரணமானவர் நல்லுச்சாமி பாலசுப்பிரமணியம் என அடையாயம் காணப்பட்டது. தமிழீழ காவல் துறையினர் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-51)

## இந்தியா..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இரு பக்கங்களிலும் தவறுகள் விடப்பட்டிருக்கின்றன என [illegible] கொண்டார் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது. [உ-10]

## தமிழ்ப் பெண்ணின் பொட்டை நீக்க உத்தரவிட்ட ரூபவாகினி அதிகாரி!

கொழும்பு, மார்ச் 30

ரூபவாகினியில் செய்தி வாசிக்கும் தமிழ்ப் பெண் ஒருவரை நெற்றியிலிருக்கும் பொட்டையும், மூக்கில் அணிந்திருந்த மூக்குத்தியையும் அகற்றுமாறு அதிகாரி ஒருவர் பணித்தாராம்!

சம்பந்தப்பட்ட தமிழ்ப் பெண் ஆங்கிலத்தில் செய்தி வாசிப்பதற்கு கலை அரங்கத்துக்கு வந்திருந்தார். அங்கு வந்த அதிகாரி நெற்றிப் பொட்டை அழித்துவிட்டும், மூக்குத்தியை அகற்றிவிட்டும் செய்தி வாசிக்குமாறு உத்தரவிட்டதற்கு இணங்க அந்தப் பெண் அவ்வாறு செய்திருக்கிறார்.

இது குறித்து தகவல்துறை துணை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்காவிடம் கேட்ட போது அவ்வாறு உத்தரவிட்ட அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளிக்கப்பட்டது!

## நெருக்கடிகள் மத்தியிலும் கல்வியில் மாணவர் சாதனை

### கல்விப் பணிப்பாளர் பெருமிதம்

ராணுவ நடவடிக்கைகள் மற்றும் அரசின் பொருளாதாரத்தடைகளின் மத்தியிலும் தமிழ் மாணவர்கள் கல்வியையே மூலதனமாகக் கொண்டு சாதனை புரிந்து வருவது பாராட்டத்தக்கது.

அண்மையில் நடைபெற்ற உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பேசும் போது யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கல்லூரியின் கட்டடங்கள் குண்டு வீசித் தரைமட்டமாக்கப்பட்ட போதிலும், ஓலைக்குடிசைகளில் உறுதி குறையாத மனத்துடன் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் மத்தியில் உற்சாகத்தையும், எழுச்சியையும் இம்மெய்வல்லுநர் போட்டி உருவாக்கியுள்ளது.

இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

கொத்தணி அதிபர் திரு. என் அனந்தராஜ் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

## விபுலானந்தர் விழா

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா இன்று திங்கட்கிழமை சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் கொண்டாடப்படவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விசாலாட்சி

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மகோ பிரபல வர்த்தகர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவி விசாலாட்சி 4 2-92 அன்று புங்குடுதீவில் காலமாகி விட்டார். இவர் சுன்னாகம் பிரபல வர்த்தகர் தர்மலிங்கம், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் தியாகராசா ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தங்கம்மா [அதிபர், புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம்] ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம், சின்னத்தம்பி, சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும், காந்தமலர், காலஞ்சென்ற இரத்தினமலர், வசந்தமலர், அருந்தவமலர், கலையரசி, பத்மகாந்தன் [சுவிஸ்], கலைச்செல்வி, கலைவதனி, பிரேமகாந்தன், குமாரசாமி, செல்வராசா [ஆசிரியர், இராமநாதபுரம் மகா வித்தியாலயம்] ஆகியோரின் பேத்தியாரும், யோபிகா, இரட்ணராஜ், தர்ஷிகா, கிருஷிகன், தஜிவன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு 649, இராமநாதபுர இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் ;
திருமதி தங்கம்மா தியாகராசா
649, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.
[20292]

## கனகசபை மனோச்சந்திரா

கனகசபை மனோச்சந்திரா [பொறியியலாளர், லண்டன்] கடந்த 19 ஆம் திகதி கொழும்பில் அகால மரணமானார். அன்னார் மணிமேகலைதேவியின் [லண்டன்] அன்புக் கணவரும், மயூரன், மதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஓய்வுபெற்ற தபால் அதிபர் கே. கனகசபை, வள்ளியம்மை [சாவகச்சேரி] ஆகியோரின் அன்பு மகனும், தியாகராஜா [ஓய்வுபெற்ற ஓவசியர், சித்தங்கேணி] தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கே. ஞானச்சந்திரன் [முன்னாள் அரச அதிபர், முல்லைத்தீவு], கே. பாலச்சந்திரன் [ஓய்வுபெற்ற அதிபர், டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி], யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் [ஓய்வுபெற்ற ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி], புவனேஸ்வரி நாகராஜா [கண்டி], பூரணச்சந்திரன் [பொறியியலாளர், புறோமோட்டர்ஸ் — யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரகுநாதன் [கனடா], ஜெகநாதன் [கனடா], இந்திரா விவேகானந்தன், கமலாதேவி கந்தகுமார் [கனடா], தவமணிதேவி சிவஞானம், ஜெயதேவி உமாச்சந்திரன், நளாயினி இரவீந்திரன் [கனடா], ரஜனி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கொழும்பு கனத்தை மயானத்தில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பூரணச்சந்திரன்
விதானையார் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
[சி 1752]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/.. இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org